**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலன்– 37வது இந்திய சுற்றுலா மற்றும் தொழிற்பொருட்காட்சி 2010–11 – சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்துதல் – மாற்றுத் திறனாளிகள் நலத் துறை சார்பில் தனி அரங்கம் அமைக்க அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்குதல்– ஆணை வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(நிலை) எண்.91 நாள்:30–11– 2010

கார்த்திகை 14, திருவள்ளுவர் ஆண்டு 2041

படிக்க:-

1. அரசாணை(நிலை) எண்.143, சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை, நாள் 13–07–2010.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் ந.க.எண். 8880/பொ.கா.2010/10, நாள் 18.10.2010.

-------

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி, 2010–11 ஆம் ஆண்டிற்கான 37வது இந்திய சுற்றுலா மற்றும் தொழிற்பொருட்காட்சி 2010ஆம் ஆண்டு டிசம்பர் இரண்டாம் வாரத்தில் தொடங்கி, தொடர்ந்து 70 நாட்கள் சென்னை தீவுத்திடலில் நடைபெறும் எனவும், துறை வாரியாக அரங்கம் அமைத்து சுற்றுலாவைச் சிறப்பிக்க ரூ.39.18 இலட்சம் ஒப்பளிப்பு செய்தும் ஆணையிடப்பட்டுள்ளது. இதில் சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதியில், ரூ.50,000/–மட்டும் உள்அரங்கு வைக்க இத்துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் தமது கடிதத்தில் மேற்படி அரசாணையில் மாற்றுத் திறனாளிகள் நலத் துறைக்கு அரங்கம் அமைக்க நிதி ஒதுக்கீடு அளிக்கப்படவில்லை என்றும் கடந்த 2009–10 ஆம் ஆண்டு மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் கீழ் இயங்கி வந்ததால் சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் மூலம் அமைக்கப்பட்ட அரங்கில் 10’ x 16’அடி அளவு கொண்ட உள் அரங்கம் ஒதுக்கப்பட்டு அதற்கான பங்குத் தொகையாக நமது துறையின் சார்பில் ரூ.50,000/– வழங்கப்பட்டுள்ளது என்றும், துறையின் சார்பில் விளம்பரம் மற்றும் செயல் திட்டம் குறித்த பலகைகள், சுவரொட்டிகள், உபகரணங்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பார்வைக்காக வைக்கப்பட்டது என்றும் அரங்கத்தின் முகப்பில் சுழலும் மேடையில் மூன்று சக்கர மோட்டார் சைக்கிள் பொருத்தி பார்வையாளர்களை வெகுவாகக் கவரும் வண்ணம் அமைக்கப்பட்டது என்றும் தற்போது, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையிலிருந்து பிரிக்கப்பட்டு மாண்புமிகு தமிழக முதல்வரின் நேரடி கட்டுப்பாட்டின் கீழ் மாற்றுத் திறனாளிகள் நலத் துறை என தனித் துறையாக செயல்பட்டு வருவதால், தனியாக இத்துறைக்கென தனி அரங்கம் அமைத்து திட்டச் செயல்பாடுகளை விளக்கிக் கூற தனி அரங்கம் (உத்தேசமாக 45’ x50’ அடி பரப்பளவு) அமைக்க ரூ.3.00 இலட்சம் தேவைப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது என்றும் நடப்பு நிதி ஆண்டில் மாற்றுத் திறனாளிகள் நலத் துறை என தனித் துறையாக செயல்படுவதால் பொருட்காட்சி அமைக்கத் தேவையான புகைப்படத் திரட்டு, விளம்பரம் மற்றும் செயல்திட்டம் குறித்த பலகைகள்,

சுவரொட்டிகள், உபகரணங்கள் மற்றும் சுழலும் மேடையில் மோட்டார் சைக்கிள் பொருத்தி பொது மக்களின் கவனத்தை ஈர்த்தல் மற்றும் அத்தியாவசிய செலவினத்தின் கீழ் ரூ.3.00 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.6.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு அளிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு அதனை ஏற்று, சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை மூலம் நடத்தப்படும் 2010–11 ஆம் ஆண்டிற்கான 37–வது இந்திய சுற்றுலா மற்றும் தொழிற்பொருட்காட்சியில், மாற்றுத் திறனாளிகள் நலத் துறை சார்பாக தனி அரங்கம் அமைக்கத் தேவையான புகைப்பட திரட்டு, விளம்பரம் மற்றும் செயல்திட்டம் குறித்த பலகைகள், சுரொட்டிகள், உபகரணங்கள் மற்றும் சுழலும் மேடையில் மோட்டார் சைக்கிள் பொருத்தி பொதுமக்களின் கவனத்தை ஈர்த்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள ரூ.3.00 இலட்சத்திற்கு (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி–3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்.

> “2235–சமூக பாதுகாப்பும் நலனும்–02. சமூக நலன் –001 நெறிப்படுத்தலும் நிருவாகமும்–I திட்டத்தில் சேராதது AF. இயலாமையுற்றோர் மறுவாழ்வு இயக்ககம்–08. விளம்பரமும் பிரச்சாரமும்–02. பொருட்காட்சி’’.
> (கு.தொ.கு. 2235 02 001 AF 0821)

5. மேலே பத்தி 3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்திற்கு தேவையான நிதி ஒதுக்கீடு, திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கம் 2010–11ல் அளிக்கப்படும். இதனை எதிர்நோக்கி, மேற்கண்ட செலவினத்தை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அனுமதிக்கப்படுகிறார். மேலும் இச்செலவினத்தை திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கம் 2010–11ல் சேர்க்கும் பொருட்டு தேவையான கருத்துருக்களை உரிய நேரத்தில் நிதித்துறைக்கு அனுப்புமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண். நிதி(சந)/67546/10, நாள் 30.11.2010 மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1454(ஆயிரத்து நானூற்று ஐம்பத்து நான்கு)ன் ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சோ.சு. ஜவஹர்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்

மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–6.
அனைத்து கருவூல அலுவல;ர்கள் / அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள்
( மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)

தலைமைக் கணக்காயர், சென்னை–18 (பெயரில்)
சம்பள கணக்கு அலுவலர், சென்னை–35.
நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு சுற்றுலா  வளர்ச்சிக் கழகம், சென்னை–2.
நகல்:–
நிதித் (சந)/(வ.செ.பொ. II)/ சுற்றுலா–பண்பாட்டு(சு3)த் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.